# மதுரையில் வள்ளலார் கருத்தரங்கம்

**மதுரை, ஆக. 25:** மதுரை தியாகராசர் கல்லூரியில் வள்ளலார்-200 கருத்தரங்கம் வரும் திங்கள், செவ்வாய் (ஆக. 28, 29) ஆகிய இரு நாள்கள் நடைபெறுகின்றன.

சாகித்திய அகாதெமி, தியாகராசர் கல்லூரியின் தமிழ்த் துறை சார்பில் இந்தக் கருத்தரங்கம் நடைபெறுகிறது. கருத்தரங்கின் தொடக்க விழாவுக்கு கல்லூரிச் செயலாளர் கருமுத்து. க.தியாகராஜன் தலைமை வகிக்கிறார். தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசுகிறார்.

புதுதில்லி ஜவாஹர்லால்நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார். திறனாய்வாளர் கு. ஞானசம்பந்தன் வாழ்த்திப் பேசுகிறார். சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் இரா. தாமோதரன் நோக்கவுரையாற்றுகிறார்.

சாகித்திய அகாதெமியின் செயலாளர் கே. ஸ்ரீனிவாச ராவ் வரவேற்புரையாற்றுகிறார். கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா நன்றி கூறுகிறார்.

முற்பகல் 11.30 மணிக்குத் தொடங்கும் கருத்தரங்க முதல் அமர்வில், 'வள்ளலாரும் வறுமை ஒழிப்பும்', 'வள்ளலார் நிகழ்த்திய அற்புதங்கள்',

'வள்ளலாரின் உரை இயல்புகள்' ஆகிய தலைப்புகளிலும், பிற்பகல் 2.30 மணிக்குத் தொடங்கும் இரண்டாம் அமர்வில் 'அருள்பெருஞ்சோதி அகவலில் குறியும் குறித்தலும்', 'நவீனத்துவ நோக்கில் வள்ளலார்', 'நவீன சைவ இயக்கமும் வள்ளலாரும்', 'வள்ளலாரின் தத்துவப் பூர்விகம்',

'தென் தமிழகத்தில் வள்ளலார் நெறியில் நாட்டார்மயம்' ஆகிய தலைப்புகளில் கருத்தாளர்கள் உரையாற்றுகின்றனர்.

செவ்வாய்க்கிழமை (ஆக. 29) காலை 10 மணிக்கு தொடங்கும் கருத்தரங்கின் மூன்றாம் அமர்வில், 'வள்ளலாரின் கோட்பாடு அத்வைதமே',

'வள்ளலார் சிந்தனைகளில் தனியும் பொதுவும்', 'அருள்வெளியில் ஒன்றாகி, வள்ளலார் ஆக்கங்களின் அச்சு வடிவம்' ஆகிய தலைப்புகளிலும், முற்பகல் 11. 30 மணிக்குத் தொடங்கும் நான்காம் அமர்வில் வள்ளலார் பாடல்கள் முன்னிறுத்தும் சமூக - சமய விழுமியங்கள், வள்ளலாரின் பேருபதேசம், வள்ளலார் ஒரு சமூக மருத்துவர், பத்தொன்பதாம் நூற்றாண்டு சமூகமும் வள்ளலாரும் ஆகிய தலைப்புகளிலும் கருத்தாளர்கள் உரையாற்றுகின்றனர்.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்குத் தொடங்கும் கருத்தரங்க நிறைவு விழாவுக்கு தியாகராசர் கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா தலைமை வகிக்கிறார்.

தமிழ் அறிஞர் சாலமன் பாப்பையா சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று நிறைவுரையாற்றுகிறார்.

**கண்காட்சி:** இந்தக் கருத்தரங்கத்தையொட்டி, கல்லூரி வளாகத்தில் சாகித்திய அகாதெமி புத்தகக் கண்காட்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# கடித இலக்கிய முன்னோடி வள்ளலார்

**தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன்**





மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற வள்ளலார் - 200 விழாவில், கருத்தரங்க மலரை வெளியிட்ட தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன்.

[illegible]

## பிற மொழிகளிலும் தமிழ் நூல்கள்

**ஜேஎன்யு பல்கலை. துணைவேந்தர் வலியுறுத்தல்**

[illegible]

**வள்ளலாரை மாணவர்கள் கற்க வேண்டும்**



[illegible]

# சமயத்துக்கு எதிரானவர் அல்லர் வள்ளலார்

## சாலமன் பாப்பையா

மதுரை, ஆக. 29: சமயத்துக்கு எதிரானவர் அல்லர் வள்ளலார் என தமிழறிஞர் சாலமன் பாப்பையா தெரிவித்தார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் சாகித்திய அகாதெமி, தமிழ்த் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்ற வள்ளலார்-200 கருத்தரங்க நிறைவு விழாவில் அவர் பேசியதாவது:

வள்ளலார் வாழ்ந்த 50 ஆண்டுகள் 3 மாதங்களில் 5,818 பாடல்கள் பாடியுள்ளார். 3 நூல்களை பதிப்பித்துள்ளார். உரைநடைகள் அதிகளவில் எழுதியுள்ளார்.

வள்ளலார் துறவி மட்டுமன்றி, சமயம் சார்ந்தவர்தான். சமயத்துக்குப் புறம்பாக ஒருபோதும் சென்றவர் அல்லர். ஆனால், சமயம் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போதைய சமயங்கள், விழாக்கள் கொண்டாடுவதில்தான் கவனம் செலுத்தின. ஆனால், மக்கள் பிரச்னைகளை பேசும் இடமாக விளங்கவில்லை.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் கடும் பஞ்சம். அவற்றைப் போக்க வேண்டும் என்கிற ஆர்வம் அவரது எண்ணத்தில் தோன்றியது. அப்போது, மக்களின் பசிப்பிணியைப் போக்க வழிமுறைகளை சமயங்கள் தேடவில்லை. ஆனால், வள்ளலார் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு இதற்குரிய தீர்வைத் தேடினார். அவற்றை சமயங்கள் ஏற்பதாக இல்லை.

எனவே, தனக்குள் தான் யார் என்ற வினாவை எழுப்பித் தேட ஆரம்பித்தார். தான் பாடிய திருவருட்பா 5 தொகுதிகளில் பல்வேறு கடவுள்களைப் பாடும் பக்தராக இருந்தார். 6- ஆவது தொகுதிக்குள் சென்றவுடன் சித்தராக மாறினார். சித்தராக மாறியவுடன் அவரது சிந்தனைகள் மாறின. அவர் காட்டிய வழி வேறாக இருந்தது. அதுதான் கடவுள் ஒன்று. இதை பட்டினத்தடிகள் போன்ற



மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வள்ளலார்-200 கருத்தரங்க நிறைவு விழாவில் பேசிய தமிழறிஞர் சாலமன் பாப்பையா. உடன் (இடமிருந்து) உதவிப் பேராசிரியர் மா. பரமசிவன், கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா, தமிழ்த் துறைத் தலைவர் இராம. மலர்விழி மங்கையர்க்கரசி.

பெரியோர்களும் வலியுறுத்தினர்.

'எவ்விடத்தும், எவ்வுயிர்க்கும் இலங்கும் சிவம்' என்கிற பாடல் வரிகள் மூலம் அதை வள்ளலார் விளக்கினார். நம்பிக்கைதான் கடவுள் என்பதை வலியுறுத்தியவர். சடங்குகள், சம்பிரதாயங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பலியிடுதலை வலியுறுத்தும் சிறு தெய்வ வழிபாட்டை நிராகரித்தார். சமயங்களைப் படிப்பதன் மூலம் நம்மிடம் இருக்கும் மன அழுக்குகள் நீங்க வேண்டும். இதற்குத்தான் சமயங்கள் பயன்பட வேண்டும் என்பதை ஆழமாக வலியுறுத்தினார். ஆனால், சமயங்கள் அவ்வாறு இல்லை என்பதை அறிந்த அவர், படித்ததன் மூலம் இளமையில் ஞானத்தைப் பெற்றார்.

சாதியை வெறுத்த அவர் ராமலிங்கம் பிள்ளை என்ற தனது பெயரை ராமலிங்கம் என மாற்றினார். இல்லாதவருக்கு உணவு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, தர்மசாலை தொடங்கினார். அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்பது வள்ளலாரின் விருப்பம். இதில் அனைத்து சமயத்தினரும் ஒன்றுகூடி தங்களது கருத்துகளை எடுத்துக் கூற வேண்டும் என நினைத்தார். ஆனால், அது நிறைவேறவில்லை.

வள்ளலார் இந்த மண்ணையும், மனிதர்களையும், இறைவனையும், உண்மையையும் நேசித்த கவிஞர். வாழ்க்கையில் நாம் அனைவரும் ஒன்று. மானுடம் ஒன்றுதான் என முழக்கமிட்டவர். கடவுளின் பெயரால் மானுடத்தை வேறுபடுத்துவதை அவர் விரும்பவில்லை. சோதி மட்டுமே கடவுள் என மானுடமேம்பாட்டுக்கு வழிகாட்டியவர் வள்ளலார் என்றார் அவர்.

முன்னதாக நடைபெற்ற 3-ஆவது கருத்தரங்க அமர்வில் ஓம் சக்தி இதழின் முன்னாள் ஆசிரியர் பெ. சிதம்பரநாதன் தலைமை வகித்து வள்ளலாரின் கோட்பாடு அத்வைதமே எனும் தலைப்பிலும், பேராசிரியர் பா. ஆனந்தகுமார் வள்ளலார் சிந்தனைகளில் தனியும், பொதுவும் எனும் தலைப்பிலும், பேராசிரியை இராம. மலர்விழி மங்கையர்க்கரசி அருள் வெளியில் ஒன்றாகி எனும் தலைப்பிலும், பேராசிரியர் வி. தேவேந்திரன் வள்ளலார் ஆக்கங்களின் அரசு வடிவம் எனும் தலைப்பிலும் பேசினர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற 4-ஆவது அமர்வில் பேராசிரியர் ஆ. தனஞ்சயன் தலைமை வகித்து வள்ளலார் பாடல்கள் முன்னிறுத்தும் சமூக, சமய விழுமியங்கள் எனும் தலைப்பிலும், பேராசிரியர் கே. பழனிவேலு வள்ளலாரின் பேருபதேசம் எடுத்துரைப்பியல் நோக்கு எனும் தலைப்பிலும், பேராசிரியர் க. காந்திதுரை வள்ளலார் ஒரு சமூக மருத்துவர் எனும் தலைப்பிலும், பேராசிரியர் க. கஜா 19-ஆம் நூற்றாண்டுச் சமூகமும், வள்ளலாரும் எனும் தலைப்பிலும் பேசினர்.

பிற்பகலில் நடைபெற்ற நிறைவு விழாவுக்கு கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா தலைமை வகித்தார். உதவிப் பேராசிரியர் மா. பரமசிவன் நன்றி கூறினார்.

இதில் புது தில்லி ஜேஎன்யு பல்கலைக்கழகத் துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் அரவேந்தன், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.